தினக் குறிப்பு		800.00
தொழில்முயற்சி நிகழ்ச்சித்திட்டம்		122,000.00
தண்டப்பணம்		2,878,734.96
மண்டப வருமானம்		1,423,025.00
விடுதிக் கட்டணம்		11,000.00
கதிர்காம சர்கிட் பங்கலா		496,060.00
கடன் வட்டி		1,954,406.26
பல்வித வருமானம்		5,082,779.85
மீளச் செலுத்தப்படாத கேள்விப்பத்திர வைப்புப் பணம்		532,500.00
பதிவுக் கட்டணம்		11,700.00

விபரம்	பற்று	வரவு
பூர்த்தியான பொருட்கள் விற்பனை		398,500.48
சேமிப்புக் கணக்கு வட்டி		1,239,809.53
வழங்குனர் பதிவுகள்		89,100.00
ஆங்கில புத்தகங்களின் வருமானம்		87,500.00
உற்பத்திப் பிரிவு வருமானம்		
உழைப்பு 10%		1,783,483.91
பகுதிநேர பாடநெறி வருமானம்		29,880,481.26
அச்சகப் பாடசாலை - நாரஹேன்பிட்டி		390,449.20
முன் கற்றலுக்கான அங்கீகாரம் (RPL)		11,117,238.11
வாகன சேர்விஸ்		6,975.00
ஏனைய உற்பத்தி அலகு		1,009,119.98
விசேட செயற்றிட்டத்திற்கான நிதியம்		
உலக திறன் நாள் நிதியம்		281,300.00
SSDP இற்கான நிதியம்		189,957,728.77
GIZ இற்கான நிதியம்		108,155.00
ILO இற்கான நிதியம்		129,900.00
மகவெளி அதிகார சபை நிதியம்		4,000,000.00
றுருளுஊ செயற்றிட்டத்திற்கான நிதியம்		122,000.00
அமைச்சின் தொழில் வழிகாட்டலுக்கான நிதியம்		119,450.00
முன்னாள் வீரர்களுக்கான நிதியம்		609,486.00
அமைச்சுக்கான நிதியம்- 13 வருடங்கள்		312,748.25
உலக உணவு அமைப்புக்கான நிதியம்		8,250.00
பதவியணி ஆகுசெலவு		
ஈ.பி.எவ். செலவு	130,797,365.11	
ஈ.ரி.எவ். செலவு	32,685,031.45	
ஈ.பி.எவ். மிகைக் கட்டணம்	5,641,480.00	
ஏனைய கொடுப்பனவு (பதவியணி)	251,094,018.05	
சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவு	664,748,664.39	
பதவியணி சேவைப் பணிக்கொடை	81,550,013.98	
பிரயாணக் கொடுப்பனவு		
விடுதி செலவுகள்	671,249.00	
உள்நாட்டு	7,664,002.68	
வெளிநாட்டு	6,158,098.39	
பரிசோதனைச் செலவு	2,444,285.00	

விபரம்	பற்று	வரவு
வழங்கள் மற்றும் ஏனைய நுகவோர்பொருட்கள்		
எரிபொருள் மற்றும் கிரீஸ்	18,831,710.93	
ஏனைய	2,039,971.94	
காகிதாதிகளும் அலுவலக தேவைகளும்	10,951,483.17	
அச்சிடப்பட்ட பொருட்கள்	988,306.20	
பராமரிப்பு		
கட்டடம்	10,505,478.82	
இயந்திர உபகரனங்கள்	8,901,942.42	
வாகனம்	12,121,036.82	
அலுவலக தேவைகள்	896,340.32	
ஒப்பந்த சேவைகள்		
விளம்பரம்	3,324,218.75	
கணக்காய்வுக் கட்டணம்	1,200,000.00	
மின்சாரம்	53,303,348.88	
வாடகைக் கட்டணம்	4,251,920.00	
காப்புறுதி	2,974,536.56	
சுத்திகரிப்பு சேவைகள்	13,070,560.74	
பத்திரிக்கை மற்றும் வாரசஞ்சிகை	533,867.50	
தபால் கட்டணம்	1,378,554.83	
வாடகை	8,808,218.26	
பாதுகாப்பு கட்டணம்	42,241,631.59	
ஊழியர்களின் நலன்புரிகளும் ஏனைவைகளும்	4,385,837.00	
தொலைபேசிக் கட்டணம்	23,142,540.54	
போக்குவரத்து	2,252,901.39	
தண்ணீர்	10,734,378.17	
வேலையில் அமர்த்தல் ஆராய்ச்சி மற்றும் தொழில்முயற்சி		
பாடநெறிகள் அபிவிருத்தி	483,700.00	
வேலையில் ஈடுபடுவர்களுக்கான பயிற்சி, மேற்பார்வை	9,199,500.00	
தொழில் முயற்சியாளர் நிகழ்சித்திட்டம்	517,488.16	
வேலையில் அமர்த்தல்	681,435.40	
ஆராய்ச்சி மற்றும் கற்கை	75,541.00	
பிரத்தியோக மக்கள் தொடர்பு	560,247.00	
ஏனைய செயற்பாட்டு செலவுகள்		
பரீட்சைகள் மற்றும் மதிப்பீடு	3,405,293.00	

விபரம்	பற்று	வரவு
சிறப்புக் கொடுப்பனவு	453,550.00	
சட்ட நடவடிக்கை கட்டணம்	240,276.00	
நானாவித	6,159,823.87	
தரக் கட்டுப்பாட்டு நம்பிக்கை	1,408,085.10	
பருவச்சீட்டு	6,195,875.78	
விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	435,873.00	
உணவு கொடுப்பனவு	19,352,250.00	
உபகரனங்களும் நுகர்வும்	1,616,458.62	
பயிற்சி கண்காணிப்பு	133,829.00	
விசேட செயற்றிட்டத்திற்கான செலவு		
உலக திறன் நாள் நிகழ்சசிகள்	281,300.00	
SSDP செலவு	189,957,728.77	
GIZ இற்கான செலவு	108,155.00	
ILO இற்கான செலவு	129,900.00	
மகவெளி அதிகார சபை செலவு	4,000,000.00	
WUSC செயற்றிட்டத்திற்கான செலவு	122,000.00	
அமைச்சின் தொழில் வழிகாட்டலுக்கான செலவு	119,450.00	
முன்னாள் வீரர்களுக்கான செலவு	609,486.00	
அமைச்சுக்கான செலவு- 13 வருடங்கள்	312,748.25	
உலக உணவு அமைப்புக்கான செலவு	8,250.00	
நிதி ஆகுசெலவு		
வங்கிக் கட்டணங்கள்	121,787.51	
பயிற்சி பொருட்கசள்	107,665,068.33	
பதவியணி பயிற்சி - தொழில் அபிவிருத்தி	4,691,010.50	
மேம்பாட்டு விடயங்களுக்கான செலவு	12,799,113.18	
தொழில் வழிகாட்டல்	1,582,347.66	
தேய்மானம்	141,350,858.16	
இலாப நட்டக் கணக்கு	1,148,719,580.99	347,982,695.50
முந்திய வருட சரிசெய்தல்		788,545.86
அங்கீகரிக்கப்பட்ட விலகியவர்கள் 2017	704,950.00	
அங்கீகரிக்கப்பட்ட விலகியவர்கள் 2016	79,900.00	
மீள்மதிப்பீடு இழப்பு	73,100,211.56	
மொத்தம்	**10,703,537,758.63**	**10,703,537,758.63**

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. VTY/E/VTA/01/18/19

මගේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2020 ඔක්තෝම්බර් 19 දින

தலைவர்
இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேரிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் மற்றும் துணைக் கம்பனிகளின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயாமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34
+94 11 2 88 72 23
ag@auditorgeneral.gov.lk
www.naosl.gov.lk

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம்பொறி உபகரணங்கள் ஒவ்வொரு 03 அல்லது 05 வருடங்களுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருப்பினும் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 4663 மில்லியன் என பெறுமதி குறிக்கப்பட்டிருந்த காணி மற்றும் கட்டிடங்கள் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் இக் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம் பொறி உபகரண உறுப்படிகள் மீள் மதிப்பீடு செய்யப்படும் போது தொடர்புடைய சொத்து வகுப்பிற்கு உரிய சொத்து மீள் மதிப்பிடப்பட வேண்டியிருப்பினும் 2018 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 4,496,902 ஆன 39 மோட்டார் வாகனங்கள் மற்றும் 25 மிதி வண்டிகள் மீள் மதீப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 60 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம் பொறி உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலம் சரியாக பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் தொடர்புடைய பெறுமானத் தேய்வு அடிப்படை அடையாளப்படுத்தப்பட வேண்டியிருப்பினும், பந்தி 74 இன் பிரகாரம் பயன்படுத்தப்படுகின்ற பெறுமானத்தேய்வு முறை சொத்தின் பயன்பாட்டு முறையினை பிரதிநிதித்துவப்படுத்தல் வேண்டும். அவ்வாறாயினும் அதிகாரசபையினால் டிசெம்பர் 31 இல் சொத்து மீள் மதிப்பீடு செய்யப்படும் போது பயன்படு ஆயுட்காலம் கருத்திற் கொள்ளப்பட்டிருப்பினும் அச் சொத்துக்களின் விளைவுடைய ஆயுட்காலம் அடிப்படையாகக் கொண்டு தொடர்புடைய பெறுமானத் தேய்வு கொள்கை திருத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08 இன் 22 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 7,898,073 ஆன நிலுவை மிகைக் கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆம் பந்தியின் பிரகாரம் பின் ஊழிய நலன்களை மதிப்பிடுகையில் இயற்கணிதம் முறை பயன்படுத்தப்பட்டு நம்பகரமான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும், அதற்கு முரணாக அதிகாரசபையினால் ஊழியர்கள் இறுதியாக பெற்றுக் கொண்ட சம்பளம் மற்றும் சேவை

காலம் மட்டும் அடிப்படையாகக் கொண்டு ஊழிய நலன் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர் நலன் பொறுப்பு மீதிக்கு சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவவ்வாறே பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகள் கணக்கிடும் குறைப்பாடுகள் காரணத்தினால் ரூபா.2,135,660 அதிகமாக கணக்கிடப்பட்டு கணக்கு வைத்ததன் காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ)இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையிக்கு சொந்தமான 06 ஏக்கர் 01 ரூட் 13.2 பேர்சஸ் அளவிலான காணியில் 02 ஏக்கர் 03 ரூட் 7.6 பர்சஸ் 2015 ஆம் ஆண்டில் தேசிய பயிலுனர் மற்றும் பயிற்றுவிப்பு அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருப்பினும், அதன் புத்தக பெறுமதியான ரூபா 202,278,158 ஆன தொகை 2018 டிசெம்பர் 31 இற்கு நிதி நிலைமைக் கூற்றில் காணி பெறுமதியிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த 02 ஏக்கர் 03 ரூட் 38.38 பர்சஸ் ஆன காணி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. மேலும், அதிகாரசபையின் மத்தியநிலையங்கள் பேணிச் செல்லுகின்ற 91 அரச காணிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு டிசெம்பர் 31 இற்கு மீள்மதிப்பீடு செய்திருந்த 04 சொத்து வகைக்கு தொடர்புடையதாக ஆண்டின் பெறுமானத்தேய்வு செலவினம் கணக்கிடப்படாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வு மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 211,926,365 குறைவாகவும் மூலதன அளிப்பு கணக்கு அந்த அளவில் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, இரண்டு சொத்து வகைகளுக்கு தொடர்புடையதாக மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 157,565,717 குறைவாக மற்றும் இரண்டு சொத்து வகைகளுக்கு தொடர்படையதாக மீள்மதிப்பீட்டு நட்டம் ரூபா 54,420,648 கூடுதலாக காண்பிக்கப்பட்டமையின் காரணத்தினால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 54,420,648 அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2018 டிசெம்பர் 31 இற்கு கட்டிடங்களுக்கு தொடர்புடைய திரட்டிய பெறுமானத் தேய்வு ஒதுக்கம் கணக்கிடப்படும் குறைப்பாடு காரணத்தினால் அக் கணக்கின் மீதி ரூபா 43,119,356 கூடுதலாக மற்றும் மீளாய்வாண்டில் கட்டிடங்களின் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 2,733,488 குறைவாக கணக்கிடல் காரணத்தினால் நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கட்டிடங்களின் ஆற்றல் பெறுமதி ரூபா 40,385,868 மற்றம் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,733,488 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 மே மாதம் வரை ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் பங்களிப்பு கணக்கிடப்படும் போது வாழ்கைச் செலவு கொடுப்பனவு கருத்திற் கொள்ளாமை காரணத்தினால் செலுத்துவதற்கு நேரிட்டிருந்த ரூபா 33,776,537 ஆன நிலுவை பங்களிப்பு பணம் மற்றும் ரூபா 5,641,480 ஆன மிகைகட்டணம் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன், அது கடந்த ஆண்டின் பற்றாக்குறைக்கு சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஓ) திறன் துறைசார் அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் பதின்மூன்று ஆண்டுகளிலான தொடர்ச்சியான கல்வி நிதியங்களின் கீழ் மீளாய்வாண்டினுள் கொடுப்பனவு அடிப்படையில் பெற்றுக் கொண்டிருந்த மொத்த பெறுமதி ரூபா 211,713,535 ஆன சொத்துக்கள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் நடைமுறையல்லா சொத்துக்கள் அப் பெறுமதியினால் குறைவாக மற்றும் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 5,878,664 குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, பிற்போடப்பட்ட வருமானக் கணக்கின் மீதியும் ரூபா 5,878,664 குறைவாக மற்றும் பிற்போடப்பட்ட வருமானம் அளிப்பு கணக்கின் மீதி ரூபா 187,622,028 குறைவாகவும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும

1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கத்தை செலுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுகளின் ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான தெளிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தவதன் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. போதியளவு நிச்சியமற்ற நிலைமைகள் உள்ளதாக நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அடிப்படையில் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதுக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

  எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பாதகமான அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணி வந்திருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள (ஈ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களை தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன. பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும், வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபையின் ஆளுகை சபையின் யாரேனும் அங்கத்தவருக்கு அதிகாரசபைக்கு இடைப்பட்டு ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

சட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் நிதிப் பிரமாணம் 1646	அதிகாரசபையின் பிரதான அலுவலகம் பயன்படுத்தும் 19 வாகனங்கள் மற்றும் மாவட்ட அலுவலங்களில் பயன்படுத்தப்படுகின்ற 22 வாகனங்கள் 2018 ஆம் ஆண்டிற்கு தொடர்புடைய ஓட்டக் குறிப்புக்கள் 2019 செப்தெம்பர் மாதம் வரையிலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிராததுடன் அவ் வாகனங்களுக்காக மீளாய்வாண்டினுள் எரிபொருளிற்காக ரூபா 1,742,025 செலவிடப்பட்டிருந்தது.
(ஆ) 2019 யூன் 17 ஆம் திகதிய 09/2009 (i) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	சுற்றறிக்கைக்கு முரணாக அதிகாரசபையின் 19 ஊழியர்களினால் கைரேகை இயந்திரத்தின் வருகை வெளியேறல் நேரம் குறிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி	அனைத்து வாகனங்களும் ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது 25,000 கிலோமீட்டர் ஓட்டத்தின் பின்னர் எரிபொருள் எரிதல் பரிசோதிக்கப்படவேண்டியிருப்பினும் தொழில்பயிற்சி அதிகாரசபையின் வாகனங்கள் தொடர்பாக 2016 தொடக்கம் 2019 செப்தெம்பர் வரையில் எரிப்பொருள் செலவழிவை பரிசோதித்திருக்கவில்லை.
(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தி	தொடர்புடைய ஒழுங்குவிதிக்கு முரணாக அதிகாரசபையின் இரண்டு வாகனங்கள் வீதம் அமைச்சரின் மற்றும் வரிசை அமைச்சின் கடமைக்காக விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் எரிப்பொருளிற்காக அதிகாரசபையினால் ரூபா 712,870 செலவிடப்பட்டிருந்தது.

- அனைத்து வாகனங்களும் ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒரு முறை அல்லது 25,000 கிலோமீட்டர் ஓட்டத்தின் பின்னர் எரிபொருள் எரிதல் பரிசோதிக்கப்படவேண்டியிருப்பினும் தொழில்பயிற்சி அதிகாரசபையின் வாகனங்கள் தொடர்பாக 2016 தொடக்கம் 2019 செப்தெம்பர் வரையில் எரிப்பொருள் செலவழிவை பரிசோதித்திருக்கவில்லை.
- தொடர்புடைய ஒழுங்குவிதிக்கு முரணாக அதிகாரசபையின் இரண்டு வாகனங்கள் வீதம் அமைச்சரின் மற்றும் வரிசை அமைச்சின் கடமைக்காக விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டினுள் எரிப்பொருளிற்காக அதிகாரசபையினால் ரூபா 712,870 செலவிடப்பட்டிருந்தது.

(அ)மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மதிப்பீட்டினை விஞ்சி ரூபா 4,133,000 ஆன பயிற்சி உபகரணங்கள் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் மோட்டார் வாகன தொழில்நுட்ப கற்கைநெறிக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அக் கொள்வனவின் போது பெறுகை வழிக்காட்டி கோவையின் 3.6 ஆம் உறுப்புரைக்கு முரணாக மீண்டும் மறுக்கட்டளை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2017 மார்ச் 15 ஆம் திகதிய பெறுகை மேலதிக வழிகாட்டி 33 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதி எல்லையை விஞ்சி திணைக்கள பெறுகை குழு செயற்பட்டிருந்தது.

(ஆ)மிரிஜ்ஜவெல தேசிய தொழிற்பயிற்சி மத்தியநிலையத்தின் ரூபா 42,613,557 ஆன ஒப்பந்த பெறுமதியொன்றுடன் கூடிய பட்டறைக் கட்டிடமொன்று நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2014 திசெம்பர் 31 இற்கு முடிவறுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், செய்யப்பட்ட வேலை பெறுமதி ரூபா 19,353,158 காணப்படுகையில் ஒப்பந்தத்தினை மீறியதன் அடிப்படையில் 2015 ஜனவரி 05 ஆம் திகதியிலிருந்து நிர்மாணிப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரரிடமிருந்து அதிகாரசபைக்கு அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 3,819,000 மீண்டும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2019 யூலை 18 ஆம் திகதி வரையிலும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததன் காரணத்தினால் 4 ஆண்டுகளுக்கு கூடுதலான காலத்திலிருந்து நிர்மாணிப்பு கைவிடப்பட்டிருந்ததினால் இந்த கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு வந்துக் கொண்டிருந்தது.

(இ) மாத்தளை கய்காவலை மாவட்ட பயிற்சி மத்தியநிலையம் புணரமைக்கையில் காணப்படுகின்ற கட்டிடத்தின் உறுதித் தன்மை தொடர்பாக ஆய்வு செய்யப்படாது கூரை மட்டும் அகற்றப்பட்டு 2017 ஆம் ஆண்டில் ரூபா 17,445,822 செலவிடப்பட்டு புணரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த, கட்டிடத்தின் கூரை அகற்றுகையில் அக்கட்டிடத்தின் செங்கள் தூண்கள் அத்திவாரத்திலிருந்து பிரிந்திருந்தமையினால் புதிதாக கொன்கிரிட் தூண்கள் இட்டு அக் கட்டிடத்தினை புணரமைத்தல், மேலதிக வேலையின் கீழ் விசேட ரேட்டுக்களின் அடிப்படையில் BOQ ரேட்டுக்களை பார்க்கிலும் 43 சதவீதத்திலிருந்து 150 சதவீதம் வரை அதிக ரேட்டுக்களுடன் வட் வரியின்றி ரூபா 1,170,000 அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

மேலும் பெறுகை வழிக்காட்டி கோவையின் 8.11 பந்தியின் பிரகாரம் ஒப்பந்தங்களை தவறிய ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக தேசிய பெறுகை முகவர் நிறுவனத்திற்கு விரைவாக தெவிரிக்கப்படவேண்டியிருப்பினும் 2019 ஜனவரி 30 ஆம் திகதி வரையிலும் அதிகாரசபை அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை தயாரிக்கப்பட்டிருந்த விபரமான செயல் நடவடிக்கைத் திட்டம் பிரகாரம் திறன் துறைசார் அபிவிருத்தி நிதியம் ரூபா 7,430 மில்லியனம் செலவிடப்பட்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பாடநெறிகள் நடாத்தப்படும் 90 பயிற்சி நிலையங்கள் 2016 ஆம் ஆண்டு இறுதியில் நவீனமயப்படுத்துவதற்கு மற்றும் 2017 ஆம் ஆண்டு இறுதியில் 20 புதிய பயிற்சி நிறுவனங்கள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 2018 டிசெம்பர் 31 இற்கு 25 பயிற்சி நிலையங்கள் நவீனமயப்படுத்தப்பட்டிருந்ததுடன் 03 பயிற்சி நிலையங்களின் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் மட்டுமே முடிவறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) திறன் துறைசார் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த அஹங்கம ஹோட்டல் பாடசாலை நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளின் அடிப்படை திட்டங்கள் மாற்றல் மற்றும் நிர்மாணிப்பு தாமதமாகல் காரணத்தினால் 04 பாடநெறிகள் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நடாத்தப்படுவதற்கு முடியாது போயிருந்ததுடன் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் ரூபா 121,809,064 செலவிடப்பட்டு 2018 மார்ச் 08 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டிருப்பினும் 2019 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் சுற்றுலா ஹோட்டலின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பாடநெறிகளுக்காக நடைமுறை பயிற்சிக்கு தேவையென குறிப்பிட்டு 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை ரூபா 28,158,840 ஆன பயிற்சி உபகரணங்கள் மற்றும் ரூபா 9,397,178 ஆன அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் 13 பயிற்சி துறைகளுக்கு தொடர்புடையதாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 09 முழு நேரக் கற்கைநெறிகள் மற்றும் 39 பகுதி நேரக் கற்கைநெறிகளின் 64 நிகழ்ச்சித் திட்டங்கள் 2018 ஆம் ஆண்டினுள் நடத்தப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் ஹேனகடுவையில் அமைந்துள்ள வெலேவத்த என்ற காணியில் 02 ரூட் 33.50 பர்சஸ் காணி அளவொன்று ரூபா 5,823,000 செலுத்தி 2010 டிசம்பர் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருப்பினும் 2020 பெப்ரவரி 24 ஆம் திகதி வரையிலும் எந்தவொரு பயனுமின்றி விளைவற்று காணப்பட்டது.

(உ)அதிகாரசபையினால் காலி மாவட்ட அச்சு பாடசாலை நடத்திச் செல்கின்ற காணியின் பழைய கட்டிடம் அகற்றப்பட்டு ரூபா 36,347,620 ஆன பொறியியல் மதிப்பீடொன்றின் கீழ் புதிய கட்டிடமொன்று நிர்மாணிப்பு நடவடிக்கைகள் 2016 ஒக்டோம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2017 செப்டெம்பர் 23 ஆம் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியிருந்தது. நிர்மாணிப்பு நடவடிக்கைகள் குறித்த திகதியில் நிறைவேற்றாமை காரணத்தினால் 2018 ஆகஸ்ட் 28 ஆம் திகதி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே, அக்காணியின் உரித்துரிமை அதிகாரசபைக்கு கையகப்படுத்திக் கொள்வதற்கு 2019 டிசெம்பர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2007 ஆம் ஆண்டில் ரூபா 15 மில்லியன் செலவிடப்பட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த அச்சு இயந்திரம் 2018 ஏப்ரல் 03 ஆம் திகதி தொடக்கம் பகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய கட்டிடத்தில் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. நிர்மாணிப்பு தாமதமாகியதன் காரத்தினால் 2017 ஒக்டோம்பர் மாதத்திலிருந்து குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட கட்டிடத்தில் அச்சீட்டு கற்கைநெறி நடத்திச் செல்லப்படுகின்றதுடன் அம் மாதத்திலிருந்து 2019 யூலை மாதம் வரை குத்தகை கூலியாக ரூபா 803,000 செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ)நிதிக் கூற்றுக்களுக்கு தொடர்புடைய ஐர்னல் குறிப்புக்கள் அங்கீகரிக்கும் எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமையின் காரணத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 774 தொடக்கம் ரூபா 74,407,442 ஆன வீச்சில் காணப்பட்ட 416 ஐர்னல் குறிப்புகள் நிறுவனத்தின் நிதி பிரிவின் உத்தியோகத்தர்களினால் அங்கீகரிக்கப்படக் கூடிய எல்லைகள் கருத்திற் கொள்ளப்படாது அங்கீகரிக்கப்பட்டிருத்தல் அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டின் குறைப்பாடாக அவதானிக்கப்பட்டது.

டப்பிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டப்பூர்வமான தேவைப்பாடுகள் பற்றி 2018 ஆம் ஆண்டு 19ஆம் இலக்க தேசிய கண்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் தலைமை கணக்காய்வாயளர் அதிபதியின் அவதானிப்பு அறிக்கை

1.2.

(அ). அதிகாரசபையின் சகல காணி மற்றும் கட்டடடங்கள் மீள்மதிப்பீடு கணக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவ்விடங்கள் இன்னும் நிறைவுசெய்யப்படவில்லை என்பதுடன் நிறைவுசெய்யப்பட்டவுடன் இறுதிக்கணக்குடன் சீர்செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க்கப்படும்.

(ஆ). ஏற்கனவே இது தொடர்பாக பரிந்துரைகள் வழங்கும் பொருட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பரிந்துரைகள் கிடைக்கப்பட்ட பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(இ) அதிகார சபையின் தற்சமயம் சொத்துக்களின் ஆயட்காலம் மற்றும் அதிகாரசபையின் கோட்பாட்டுக் கொள்கையான குறைந்தவரும் மீதி முறைமைக்கமைய அடிப்படையாகக் கொண்டு தேய்மானங்கள் செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மீள்மதிப்பீட்டுக் கணக்கெடுப்பப செய்யப்படும் சந்தர்ப்பத்தில் கணக்கியல் தரப்படுத்தல்களுக்கமைய நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) ஊழியர் சேமலாப நிதியம் மூலம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் திறைசேரி மூலம் இதற்கு தனியான நிதி ஒதுக்கீடு வழங்கப்படாத காரணத்தால் வருடாந்தம் கிடைக்கப்படும் பிரதிலாபம் மூலம் கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது.

(உ.) இந்த முறையை பின்பற்ற நடவடிக்கை எடுத்தால் பெரியளவிலான பணம் செலவாகுவதுடன் இது தொடர்பாக மேலும் விடயங்களை ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

(ஊ.) தற்சமயம் காணி மற்றும் கட்டடங்கள் மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அவ்விடங்கள் நிறைவுசெய்யப்பட்டவுடன் இந்தப் பெறுமானத்தை புத்தகங்களில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(எ) 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு சமர்ப்பிக்கப்படும் போது சரிசெய்வதற்கு நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஏ) 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு சமர்ப்பிக்கப்படும் போது இது சரிசெய்வதற்கு நடடிவக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஒ) திறைசேரியில் இதற்காக தவணைப்பணம் கிடைத்துள்ளதால் பணம் கிடைத்த ஆண்டின் அடிப்படையில் கொடுப்பனவு செலுத்தப்பட்டு செலவாக சரிசெய்யப்பட்டுள்ளது.

(ஓ) இந்த மீதிகள் 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கு மீள சமர்ப்பிக்கப்படும் போது சரிசெய்யப்பட்டுள்ளது.

2.

(அ) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் சகல வாகன குறிப்புகளும் உரிய முறையில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்சமயம் மாதாந்த வாகனம் ஒட்டும் குறிப்புக்கள் உரிய முறையில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) அதிகார சபையின் சகல உத்தியோகத்தர்களின் வரவு பற்றிய விரல் அடையாள குறிப்பு இயந்திரத்தில் வரவு மற்றும் வெளியேரல் நேரங்களுக்கமைவாக நடாத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பிரதானமாகவும் முறையாகவும் தலைமை அலுவலகத்தில் விரல் அடையாள இயந்திரம் மூலம் வரவு மற்றும் வெளியேரல் பற்றி உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) தற்சமயம் எரிபொருள் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கை போக்குவரத்து பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஈ) தேவைப்பாட்டிற்கமைய நிரல் அமைச்சின் கடமைகளுக்காக வாகனங்கள் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் அந்த வாகனங்களை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ.) 2018 ஆம் ஆண்டு திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படும் போது தொழிநுட்ப மதிப்பீட்டுக்குழுவினால் நிராகரிப்படுதல், விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படாதிருத்தல், இறுதி தொழிநுட்ப மதிப்பீட்டில் நிராகரிக்கப்படுதல். சாரிதிப் பாடசாலைக்காக திட்டமிடப்பட்டபடி மோட்டர் வாகனங்கள் கொள்வனவு செய்ய முடியாதுப்போகுதல், போன்ற விடயங்களின் அடிப்படையில் குறித்த வருடத்தில் ரூபாய் மில்லியன் 10 தொகைப்பணம் எஞ்சியதுடன் அந்த எஞ்சிய பணத்தை ஈடுபடுத்தி மோட்டர் வாகன தொழிநுட்ப பாடநெறிகளுக்கு தேவையான பயிற்சி உபகரனங்களை கொள்வனவு செய்யுமாறு பணிப்பாளர் (பயிற்சிகள்) அவர்களினால் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கமைய ரூபா 4,133,000 தொகை பெறமதியான உபகரனங்கள் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு திட்டமிடல்கள் இல்லாதும் வாங்கவதற்கு நேரிட்டது. குறித்த வரடத்தினுள் கொள்வனவு செயற்பாடுகளை நிறைவுசெய்ய இருந்ததாலும் அப்பயிற்சி நடவடிாக்கைகளுக்காக பாடநெறிகளை ஆரம்பிக்க முன்னர் கொள்வனவு செய்யும் தேவை இருந்ததாலும் கொள்வனவு வழிகாட்டல் முறைக்கோவையில் 3.5/3.6 பிரகாரம் 50% வீத அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு திணைக்கள கொள்வனவு குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் கொள்வனவு வழிகாட்டல் முறைக்கோவைக்கு 2017.03.15 ஆம் திகதி தொடக்கம் அமுலாக்கப்பட்டுள்ள மேலதிக 33 இற்கமைய திணைக்கள கொள்வனவு குழுவின் அங்கீகாரம் வழங்கும் எல்லை ரூபா மில்லியன் 100 வரை காணப்படுவதாக பணிவுடன் அறியத்தருகின்றேன். ஆரம்ப கொள்வனவில் இருந்து 50% வீதம் பெறுதல் வரையிலான காலம் வரை ரூபாவின் வீழ்ச்சியை ஒப்பிடுகையில் நிறுவனத்திற்கு நிதிப்பாதிப்புக்கள் ஏற்படவில்லை என குறிப்பிடுவதுடன் எவ்வாறாயினும் 50% வீத எல்லையின் கீழ் பொட்களை கொள்வனவு செய்தல் தற்சமயம் நிறுத்தப்பட்டுள்ளது என மேலும் அறியத்தருகின்றேன்.

(ஆ.) 20127, 2018, 2019 ஆம் ஆண்டுகளில் இந்தச் செயற்றிட்டங்களின் எஞ்சிய வேலைகள் நிறைவுசெய்வதற்கும், குறைகளை நிவர்த்திசெய்து கட்டடங்களை பாவிக்கக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்பாடுசெய்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தால் செயறிட்டங்களை ஆரம்பிக்க முடியாதுப்போனது. மீண்டும் 2020 ஆம் அண்டில் பிரிவுசார்ந்த திறன் அபிவிருத்தி நிகழ்சித்திட்டங்களில் ஒதுக்கீட்டின் அடிப்படையில் இந்த செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்க திட்டமிடப்பட்டது.

ரூபா.3,819,000.00 தொகையை அதிகார சபைக்கு பாதிப்பில்லாத வகையில் செலுத்துவதற்கு தேவையான முறையாவது இந்த செயற்றிட்டத்தின் தடுத்துவைப்பு பணத்தில் இருந்து முடிந்தளவு தொகையை செலுத்திவிடுவதற்கும், ஒப்பந்த நிறுவனத்திற்கு சொந்தமான சொத்துக்களை மீண்டும் மதிதப்பீடு செய்து பொருத்தமான வழிமுறையொன்றை பின்பற்றி அதன் மூலம் எஞ்சிய நிலுவைப்பணத்தை செலுத்துவதாகும்.

(இ.) இங்கு தெளிவாக களஞ்சியத்தில் பௌதீக பரிசோதனையின்போது குறைபாடு காணப்படவில்லை என்பதுடன் சகல உபகரணங்களும் உரிய பிரகாரம் நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

3.

(அ) 27 பயிற்சி நிலையங்களில் சீரமைப்பு பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளன.

புதிய 4 நிலையங்களில் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

மேலும் இரண்டு புதிய நிலையங்களின் பணிகள் இந்த ஆண்டு இறுதியில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய நிலையமான பாணந்துறையில் வேலைகளை ஆரம்பிப்பதற்கும் கொள்வனவு செய்வதற்கும் இரண்டு தடவைகள் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. கொள்வனவு நடவடிக்கைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

(ஆ) பயிற்சி ஹோட்டல் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ளது மற்றும் இந்த வளாகம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பல்வேறு நிகழ்ச்சிகள், கூட்டங்கள், வதிவிட நிகழ்ச்சிகள் நடாத்த தெரிவுசெய்யப்படுவதும் ஹோட்டல் வளாகமாகும்.

(இ) முழுநேர பாடநெறிகள்

பகுதி நேர பாடநெறிகளை தொடங்க திட்டமிட்டிருந்தாலும் கீழ்க் காணும் காரணங்களினால் அதிகாரசபை அதை ஆரம்பிக்க முடியவில்லை. எனவே, இந்த நிலைமையை நிவர்த்திசெய்துகொள்வதற்கு பயிற்சி பிரிவு சில பகுதி நேர படிப்புகளை தொடங்க பல்வேறு நிறுவனங்களின் கோரிக்கையின் பேரில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளது.

- பகுதி நேர படிப்புகளுக்கான மதிப்பீட்டில் தேவைப்படும் குறைந்தபட்ச பயிற்சியாளர்களின் எண்ணிக்கை முழுமையடையவில்லை.
- தகுதியான பயிற்றுவிப்பாளர்களை பணியமர்த்துவதில் உள்ள சிக்கல்கள்.
- பயிற்றுவிப்பாளர்களுக்கு பகுதி நேர படிப்புகளை கட்டாயமாக நடத்த உத்தரவிடுவதில் உள்ள சிரமங்கள்.
- பகுதி நேரப் படிப்புகளில் பயிற்றுவிப்பவருக்குச் செலுத்தும் பயிற்சி நேரத்திற்குப் போதிய பணம் இல்லை.
- ஏஞ நிலை 4 தகைமை பெற்றுள்ள பயிற்றுனர்கள் ஏஞ நிலை 5 தகுதிகளைப் பெறுதல் நிறுவன தேவை என்பதால் வாராந்த நாட்களில் குறித்த பயிற்றுனர்கள் பயிற்சிக்காக தொழிற்துறை தொழிநுட்ப பல்கலைக்கழகத்தில் அல்லது வேறு நிறுவனத்தில் பயிற்சிபெறுதல் காரணமாக பயிற்றுனர்களுக்கு பகுதி நேர படிப்புகளை நடத்த வாய்ப்பு இல்லை.
- முழு நேரப் பாடங்களைக் கற்பிக்கும் பயிற்றுவிப்பாளர்கள் பகுதி நேரப் படிப்புகளில் பங்கேற்க விரும்பாத காரணத்தால்

(ஈ) இந்த நிலையத்தின் எதிர்கால வளர்ச்சி நடவடிக்கைகளுக்காக இந்த கட்டிடம் வாங்கப்பட்டுள்ளது. இந்த கொள்முதல் இல்லை என்றால் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு செல்ல உட்பிரவேசிக்கும் பாதை இல்லை. மேலும் இந்த நிலம் வேறு தரப்பு ஒன்று வாங்கியிருந்து ஒரு கட்டுமானம் அமைத்திருந்தால் அது நிலையத்தின் தோற்றத்திற்கு ஒரு பிரச்சினையாக இருந்திருக்கலாம். எனவே, இந்த நிலத்தை ஏவுயு மூலம் வாங்குவது மூலோபாய ரீதியாக முக்கியமானது. இந்த நிலம் ஏற்கனவே ஹேனகடுவ நிலையத்தின் பயிலுநர்கள் வெளி செயற்பாடுகளுக்காகவும் நாளாந்த செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்துவதனாலும் இந்த நிலம் பயனுள்ள வகையில் ஈடுபடுத்தப்படுகிறது.

(உ.) நில பரிமாற்ற விவகாரம் ஏற்கனவே இறுதி கட்டத்தில் உள்ளது. அனைத்து கோப்புகளும் காணி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்த நிலத்தை திறன் அபிவிருத்தி அமைச்சுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அமைச்சு நிலத்தை மாற்றும் முறையாக ஏவுயு க்கு. இந்த காணியின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதுபோல பெட்டிகலவத்தையின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒப்பந்த நிறுவனம் பணியை முடித்தது மற்றும் படிப்புகள் ஏற்கனவே அச்சிடலை நிறுவுவதன் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

(ஊ.) 2020 ஆம் ஆண்டு தெடக்கம் ஜர்னல் குறிப்பு பணிப்பாளர் (நிதி) அவர்களால் கையொப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.